# உன்னுள்

# நான் கரையும் கவிதைகள்

முனைவர் பெரியசாமி சுந்தரேசன்

SHANLAX PUBLICATIONS

# நூல் விபரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | உன்னுள் நான் கரையும் கவிதைகள் |
| ஆசிரியர் | : | முனைவர் பெரியசாமி சுந்தரேசன் |
| ISBN | : | 978-93-6163-003-3 |
| DOI | : | https://doi.org/10.34293/shanlax.9789361630033 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு, மே, 2026 |
| விலை | : | ₹99/- |
| நூல் அளவு | : | Demmy |
| பக்கங்கள் | : | 52 |
| பதிப்பகம் | : | சான்லாக்ஸ் பதிப்பகம்<br>61,T.P.K மெயின் ரோடு,<br>வசந்த நகர், மதுரை - 3. |

# சமர்ப்பணம்

பிரபஞ்சத்தை இயக்கும் ஏக பரம்பொருளுக்கும்,

என் குருவாகிய சுப்ரதீபக்கவிராயருக்கும்

என்னை இந்த உலகிற்கு அறிமுகப்படுத்திய
என் அன்புப்பெற்றோருக்கும்,

என் வளர்ச்சிக்கு உறுதுணையாக
இருந்து என்னை வழி நடத்தும் என் அன்பு
அண்ணன் மற்றும் அண்ணிக்கும்

என் எண்ணங்களுக்கு இறகாகி
எழுதத்தூண்டிய இயற்கைக்கும்,

உன்னுள் நான் என்னுள் நீ என உள்ளத்தில்
கலந்து உடன் பயணிக்கும்
என் வாழ்க்கை துணைக்கும்

இக்கவிதை நூலை வெளியிட

எனக்கு தூண்டுகோலாக இருந்து ஊக்கமளித்த

நல் உள்ளத்திற்கும் என் மனமார்ந்த நன்றிகளை

சமர்ப்பிக்கிறேன்.

# அனைவருக்கும்

# என் அன்பான வணக்கங்கள்

கவிதை என்பது பெரும்பாலும் காதலின் உணர்வுகளோடு பின்னிப்பிணைந்த உடலும் உயிரும் போலதான். உயிரில் மலரும் காதலுக்கு உடலில் வெளிப்படும் மொழிதான் கவிதை.

அப்படிப்பட்ட கவிதையையும் காதலையும் கடந்து செல்லாத மனிதர்கள் இருப்பது மிகவும் அரிதே.

ஆனால் அந்த காதலுக்காக காத்திருந்து, அந்த ஏக்கத்தை வார்த்தைகளாக வடிப்பது என்பது ஒரு தனி சுகம் தான்.

அவ்வாறே, என் வாழ்க்கையின் பெரும்பாலான நாட்களை வெளிநாட்டில் தனிமையோடு கழித்தேன். என் காதலுக்காக காத்திருந்த காலங்களில் எழுதிய கவிதைகளும், என் காதல் நெருங்கிய பின்பு எழுதிய கவிதைகளும், அந்த காதல் கைக்கூடிய பிறகு

மலர்ந்த கவிதைகளும் – இவை அனைத்தையும் என் சிற்றறிவுக்கு எட்டிய அளவில், கற்பனையோடு எனக்குத் தெரிந்த தமிழில் எழுதி, கவிதை பிரியர்களான வாசகர்கள் உங்களின் பார்வைக்கும் வாசிப்பிற்கும் சமர்ப்பிக்கிறேன்.

இது என் முதல் படைப்பு உங்கள் அன்பும் ஆதரவும் என்றும் வேண்டுகிறேன்.

**நன்றி.**

# இயற்கை அன்னை

தந்தையின் கண்டிப்பு சுடும் வெயிலென
இருந்தாலும்
தாய் நீயோ இரவின் தாலாட்டாய் இதயத்தைத்
தழுவுகிறாய்”

பசிக்கும் பிள்ளைக்கு பாலை ஊட்டும் தாயைப்
போல,
பாரினில் வாழும் பல்லுயிர்க்கும் நீரை ஊட்டும்
அன்னையே!

பகலவனின் வெம்மையில் பல்லுயிர்கள் துடிக்கும்
வேளையில்,
பசுமை எனும் போர்வை போர்த்தி,
“இயற்கை அன்னை” எனும் பேரழகாய்
மனிதக் கண்களில் காட்சியளிப்பவளே!

சுவாசிக்காத குழந்தைக்கு தொப்புள் கொடியில்
உயிர்மூச்சை தரும் தாயை போல,
சுற்றியுள்ள அனைத்து உயிர்களுக்கும்
வளிமண்டலம் எனும் கொடியில் சுவாசத்தை
இணைத்து வாழ்வளித்தவளே!

எல்லாமுமாய் இருப்பவளே எந்த சொல்லால்
புகழ்வேன்?

என் நன்றியை எந்த மொழியால்
வெளிப்படுத்துவேன்?
உயிர்கள் இருக்கும் வரை
உன் அருளே உலகின் சுவாசம்,
இயற்கை அன்னையே!

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | தன்னைத் தேடும் பயணம் | 1 |
| 2 | காலம் | 2 |
| 3 | தனிமை | 3 |
| 4 | மௌனம் | 4 |
| 5 | கோபம் | 5 |
| 6 | அறிவும் ஆகாயமும் | 6 |
| 7 | புதிய தலைமுறை ஆண்கள் | 8 |
| 8 | இளமையின் இனிய வாழ்த்து | 9 |
| 9 | என் பயணத்தில் நீயே | 10 |
| 10 | உன்னில் கரையும் உவமைகள் | 11 |
| 11 | கணவனும் மனைவியும் | 12 |
| 12 | தொலைவை தாண்டிய நேசம் | 14 |
| 13 | வெண்ணிலவின் தேடல் | 15 |
| 14 | உயிரின் உரையாடல் | 16 |
| 15 | ஆதியும் பாதியும் | 17 |
| 16 | துண்டிக்காத உரையாடல் | 18 |
| 17 | காலத்தை கடன் கேட்ட காதல் | 19 |
| 18 | காதல் ராணியின் வருகை | 20 |
| 19 | காதலர் தினக்கனவு | 21 |
| 20 | எல்லையில்லா அன்பு | 22 |
| 21 | நீயே என் வரம் | 23 |
| 22 | காதலை வரையும் என் காதலி | 25 |
| 23 | காதல் மந்திரம் | 26 |
| 24 | நீயாக நான் | 27 |
| 25 | கனவுக்கன்னி | 29 |
| 26 | தாமரையும் தேனும் | 30 |

| | | |
|---|---|---|
| 27 | இதழ்கள் இணையும் பொழுது | 31 |
| 28 | வளமான காதல் | 32 |
| 29 | ஒன்றாய் கரையும் பயணம் | 33 |
| 30 | காதல் இணைவின் இசை | 34 |
| 31 | அன்பின் வானம் | 35 |
| 32 | ஒன்றான நம் உயிர் | 36 |
| 33 | மௌனத்தின் ஒளி | 37 |
| 34 | போதாத நேரங்கள் | 38 |
| 35 | அழுகை எனும் ஆயுதம் | 39 |
| 36 | தந்தையின் காத்திருப்பு | 40 |
| 37 | தாய்மையின் வலி | 41 |
| 38 | அம்மா | 42 |